STC 494/2022

24.03.2025.

பு.சா.2

பெயர்: ராதாகிருஷ்ணன்

த/பெ. சுவாமி

பு.சா.2 அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் புகார்தாரர் நிறுவனத்தில்தான் வேலைசெய்துவருகிறன் என்றால் சரிதான். தற்போதும் நான் புகார்தாரர் நிறுவனத்தில் ரீஜினல் சேல்ஸ் மேனேஜராக வேலை பார்த்துவருகிறேன். சில இடங்களில் டிஸ்டிரிபுயூட்டர் செல்வார்கள், சில இடங்களில் நான் செல்வேன் என்றால் சரிதான் . பொருட்கள் டெலிவரி செய்வதை போய் பார்ப்பேன் என்றால் நானேதான் செல்வேன்.

டெலிவரி செய்த பொருட்கள் டேமேஜ் ஏற்பட்டாலோ எக்ஸ்பைரி ஆனதாக சொன்னாலோ நிறுவனம் மாற்றிக்கொடுக்கும். வில்வாத்திரி ஆயுர்வேத மருத்துவமனையில் மேற்படியாக பொருட்களை மாற்றிக் கொடுத்துள்ளேனா என்றால் அவ்வாறு புகார் எதுவும் வரவில்லை. பிரமாண பத்திரிக்கையில் கூறிய சங்கதிகள் அனைத்தும் உண்மை என்றால் சரிதான். மேற்படி பத்திரிக்கையில் நான் தாக்கல் செய்த டேக்ஸ் இன்வாய்ஸ் எங்கள் நிறுவனத்தால் வழங்கப்பட்டதாகும். மேற்படி இன்வாய்ஸ்ல் அனுப்புநர் இடத்தில் டாக்டர் என்று குறிப்பிடவில்லை, அவர் வைத்தியர் ஆவார்.

நாங்கள் அனுப்பிய இன்வாய்ஸ்கள் அனைத்தையும் மருத்துவர் பெயருக்குதான் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் 9 இன்வாய்ஸ்கள் தான் அவை. அவைகள் முறையே **எமசாஆ.1** முதல் **எமசாஆ.9** ஆகும். மேற்படி இன்வாய்ஸ்களில் உள்ள மருந்துகள் அங்கு வேலை செய்யும் மருத்துவர்களின் தனிப்பட்ட உபயோகத்திற்காக வழங்கப்பட்டது என்றால் சரிதான். பிரமாண பத்திரிக்கையில் நான் நிறுவனத்தின் சார்பாக எதிரியை சந்தித்து ஆர்டர் எடுத்துள்ளதாகக் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி இன்வாஸ்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

இவ்வழக்கு பதிவுசெய்யும்போது புகார்தாரர் நிறுவனம் மேற்படி இன்வாய்ஸை தாக்கல் செய்யவில்லை என்றாலும் என் மூலமாக மேற்படி இன்வாய்ஸை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையில் நான் எதிரிகளுக்கு பொருட்கள் சப்ளை செய்திருந்தால் மேற்படி இன்வாய்ஸை அவர்களே தாக்கல் செய்திருப்பார்கள் என்றாலும்

அவ்வாறு நான் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி இன்வாஸ்க்காக எதிரி எந்த காசோலையையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தில் இருந்து ஏற்கனவே அனுப்பிய பொருட்களில் டேமேஜ் இருந்ததை நாங்கள் ரிட்டர்ன் எடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் முதல் விசாரணையில் கூறியதுபோல் பாதுகாப்பிற்காக பூர்த்தி செய்யப்படாத காசோலைகளை வாங்கி நாங்கள் பூர்த்தி செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 02.04.2022 ம் தேதி எஸ்ஆர் இன்வாய்ஸ் 10 ன்படி ரூ.33,000/- க்கு மருந்துகளை சப்ளை செய்துள்ளோம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இன்வாய்ஸ் போலியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(S/d.Tr.E.Pragasam, B.A.B.L.,)

Judicial Magistrate No. II,
Pollachi.